1973 ஆகஸ்ட் 6]

படிக்க வசதி செய்யப்படும். அதே போல், சேர்க்கப்படுபவர்கள் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்படுவதால், இங்கே வந்து படிப்பதற்குப் பயணப்படி, இலவச உணவு, உறையுள் ஆகியவையும் 25 சதவிகிதம் மாணவர்களுக்குத் தரும் அளவிலும், இலவச உணவு, உறையுள் இல்லாமல் மற்ற வசதிகள், சீருடை வழங்குதல் போன்ற வசதிகள் 25 சதவிகிதம் மாணவர்களுக்குத் தருகிற அளவிற்கும் திட்டம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பெண்களுக்கு என்று மாதிரிப் பள்ளி அமைக்க முயற்சி இங்கே விரைவில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இந்த மாடல் ஸ்கூல் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கம் முழுச் செலவை ஏற்றுக் கொள்கிறார்களா, அல்லது தமிழ்நாடு அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கூறியிருக்கிறார்களா, அல்லது கிராண்ட் ஏதாவது தருவதாகக் கூறப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த மாதிரிப் பள்ளிகள் நடத்துவதற்கான முழுச் செலவையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அதை நிர்வகிப்பது, ஆசிரியர்கள் நியமனம் செய்வது, ஆகியவை மாநில அரசின் பொறுப்பில் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. வேண்டுமென்றால், மத்திய அரசின் ஓரிரண்டு பிரதிநிதிகள் அந்த நிர்வாகக் குழுவில் இருக்கலாம். ஆனால் முழுப் பொறுப்பையும் மாநில அரசின் கையில் விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதைக் கருத்தளவில் மத்திய கல்வியமைச்சர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

Delegation from Bangla Desh.

*31 Q.—Thiru R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether any delegation from Bangla Desh had discussions with the officials of the State Government during January 1973; and

(*b*) if so, the details thereof?

[1973 ஆகஸ்ட் 6

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பங்களாதேஷ் கல்விக் குழு ஜனவரி மாதம் இங்கே வருகை தந்து இங்கேயுள்ள கல்வியாளர்கள், திட்டக்குழு உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்து, இங்கேயுள்ள கல்வி நிலையங்களைப் பார்வையிட்டு, பல்வேறு கல்வி வல்லுநர்களோடு உரையாடிவிட்டுச் சென்று இருக்கிறார்கள்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை.

*32 வினா—*திரு. சு. துரைசாமி*: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் A and B கிளாஸ் அறைகளை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) இதுபற்றிய செயற்குறிப்பு மருத்துவக் கல்வி இயக்குநருடைய பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கடந்த மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக நாம் பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளைப் பார்வையிட்டோம். கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ஏ வகுப்பில் ஒரே ஒரு அறையும், பி கிளாஸில் 10-க்குக் குறைவாகவும் அறைகள் இருக்கின்றன. மற்றைய மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் முதல் வகுப்பில் 7, 8 அறைகளும், அதைப் போலவே இரண்டாம் வகுப்பில் 40, 45 அறைகளும் இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு அறைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பாக மாவட்ட மருத்துவ மனையாக இருந்தது. கல்லூரியை அங்கே உருவாக்கிய காரணத்தினாலே மருத்துவ மனையில்